ஜெர்மனி கூட்டாட்சி குடியரசு

Bundesamt für Migration und Flüchtlinge

euaa EUROPEAN UNION AGENCY FOR ASYLUM

# சர்வதேசப் பாதுகாப்பிற்காக நீங்கள் மீண்டும் விண்ணப்பிக்கும் போது அறிந்திருக்க வேண்டியவை (பிந்தைய விண்ணப்பம்)



TAMIL

தாங்கள் தற்போது ஜெர்மனியில் உள்ளீர்கள்; அது ஒரு EU+ நாடாகும்.
EU+ நாடுகள் பின்வருமாறு:

ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) 27 உறுப்புநாடுகள்: ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, குரோஷியா, சைப்ரஸ், செக்கியா, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, அயர்லாந்து, இத்தாலி, லாத்வியா, லிதுவேனியா, லக்சம்பர்க், மால்டா, நெதர்லாந்து, போலந்து, போர்ச்சுகல், ருமேனியா, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, ஸ்பெயின், ஸ்வீடன்; மேலும்

4 பிற நாடுகள்: ஐஸ்லாந்து, லிக்டென்ஸ்டைன், நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து.

# பொருளடக்கம்


பிந்தைய விண்ணப்பம் என்பது என்ன? 3

நடைமுறை என்பது என்ன? 5

➢ படி 1: உங்கள் விண்ணப்பம் மீண்டும் பதிவு செய்யப்படவும் சமர்ப்பிக்கப்படவும் வேண்டும் 5

➢ படி 2: உங்கள் விண்ணப்பத்தின் முன்-பரிசீலனை 9

➢ படி 3: உங்கள் விண்ணப்பத்தின் உட்பொருள் அடிப்படையிலான பரிசீலனை 11

➢ படி 4: உங்கள் விண்ணப்பம் குறித்த தீர்மானம் 12

எனது உரிமைகள் என்ன? 13

எனது பொறுப்புகள் என்ன? 17

நான் எனது பொறுப்புகளை நிறைவேற்றாவிட்டால் அதன் விளைவுள்ள் என்ன? 21

உங்களுக்கு அது தேவைப்பட்டால், நீங்கள் சிறப்பு ஆதரவைப் பெறுவீர்கள். 23

நீங்கள் உங்கள் நாட்டிற்கு திரும்ப விரும்பினால் என்ன? 24

## பிந்தைய விண்ணப்பம் என்பது என்ன?

**நீங்கள் எந்த EU+ நாட்டிலாவது இரண்டாவது முறையாகவோ அல்லது அதற்கு மேற்பட்ட முறையாகவோ சர்வதேசப் பாதுகாப்பிற்காக விண்ணப்பிக்கும் போது, உங்கள் புதிய விண்ணப்பம் பிந்தைய விண்ணப்பம் என்று அழைக்கப்படுகிறது.**

உங்கள் முந்தைய விண்ணப்பம் மற்றொரு EU+ நாட்டில் செய்யப்பட்டிருந்தாலும், உங்கள் புதிய விண்ணப்பம் ஒரு பிந்தைய விண்ணப்பமாகக் கருதப்படும்.

பிந்தைய விண்ணப்பம் என்பது நீங்கள் முன்பு பெற்ற தீர்மானத்திற்கு எதிரான மேல்முறையீடு அல்ல. உங்கள் முந்தைய விண்ணப்பம் தொடர்பான நடைமுறை இறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நீங்கள் ஒரு பிந்தைய விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். இதன் பொருள்:

- உங்கள் முந்தைய விண்ணப்பம் குறித்த தீர்மானம் உங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்க வேண்டும்
- எந்த மேல்முறையீடும் நடைபெற்று கொண்டிருக்கக் கூடாது
- மேல்முறையீட்டை சமர்ப்பிப்பதற்கான காலவரம்பு முடிந்திருக்க வேண்டும்

முந்தைய தீர்மானத்துடன் வெறுமனே ஒப்புக்கொள்ளாமல் இருப்பது மட்டும், சர்வதேசப் பாதுகாப்பிற்காக மீண்டும் விண்ணப்பிப்பதற்கான காரணமாகாது.

நீங்கள் விண்ணப்பத்தை தாமதமாக சமர்ப்பித்தால், நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும் புதிய கூறுகள் (சான்றுகள் அல்லது ஆவணங்கள் போன்றவை)உங்கள் தேவைக் கூற்றை ஆதரித்தல் சர்வதேச பாதுகாப்பு குறித்து.



புதிய கூறுகள் என்பது, சர்வதேசப் பாதுகாப்பிற்கான உங்கள் கோரிக்கையை ஆதரிக்கும், மேலும் உங்கள் முந்தைய விண்ணப்பம்/விண்ணப்பங்களின் போது நீங்கள் சமர்ப்பிக்க முடியாத கூறுகளாகும்.



புதிய கூறுகள் என்பது, நீங்கள் பெற்ற புதிய ஆவணங்கள் அல்லது சான்றுகளாகவோ, அல்லது உங்கள் கடைசி விண்ணப்பம் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்ட நாளுக்குப் பிறகு நடந்த நிகழ்வுகளாகவோ இருக்கலாம். உதாரணமாக:

- உங்களுக்கு நடந்த புதிய நிகழ்வுகள்
- உங்கள் சொந்த நாட்டில் நடந்த புதிய நிகழ்வுகள்
- உங்கள் தனிப்பட்ட நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்கள்

**விதிவிலக்காக, பின்வரும் காரணங்களில் ஒன்று பொருந்தினால், உங்கள் முந்தைய விண்ணப்பத்தின் போது இருந்த கூறுகளும் புதிய கூறுகளாக இருக்கலாம்.**

- உங்கள் முந்தைய விண்ணப்பத்தின் போது இந்த புதிய கூறுகளை நீங்கள் அறிந்திருக்க முடியாமல் இருந்தது..
- நியாயமான காரணத்தினால், இந்த புதிய கூறுகள் பற்றி நீங்கள் பேச முடியாமல் இருந்தது. இந்நிலையில், அந்த காரணங்களை நீங்கள் விளக்க வேண்டும்.

உங்கள் முந்தைய விண்ணப்பத்தில் நீங்கள் வழங்கிய தகவல்கள் கருத்தில் கொள்ளப்படும். இருப்பினும், உங்கள் முந்தைய விண்ணப்பம் மீண்டும் பரிசீலிக்கப்படாது.

## நடைமுறை என்பது என்ன?

நீங்கள் மீண்டும் சர்வதேசப் பாதுகாப்பிற்காக விண்ணப்பித்ததாக அதிகாரிகளுக்குத் தெரிவித்த பிறகு (இது பிந்தைய விண்ணப்பம் என்று அழைக்கப்படுகிறது), அந்த நடைமுறையில் பல படிகள் உள்ளன.

**படி 1. உங்கள் விண்ணப்பம் மீண்டும் பதிவு செய்யப்படவும் சமர்ப்பிக்கப்படவும் வேண்டும்.**

பதிவும் சமர்ப்பித்தலும் பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றன.



உங்கள் கைரேகைகள் எடுக்கப்படும்.



உங்கள் புகைப்படம் எடுக்கப்படும்.




உங்கள் அடையாளம், பயணம் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தையும், அத்துடன் உங்களிடம் உள்ள புதிய ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்.



உங்கள் தொடர்பு விபரங்களை (முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி) வழங்குமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்.



நீங்கள் ஒரு மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட வேண்டியிருக்கலாம்.



உங்களையும் உங்கள் தனிப்பட்ட உடைமைகளையும் சோதிக்கலாம். உங்கள் தனிப்பட்ட உடைமைகள் உங்களுடைய சொத்தாகவே இருக்கும்; அபாயகரமானதாகக் கருதப்படும் உடைமைகளைத் தவிர, அவை உங்களுக்குத் திருப்பித் தரப்படும்.



உங்களிடம் பின்வருவன கேட்கப்படும்:

- உங்கள் தனிப்பட்ட விவரங்களையும், இந்த நாட்டிலோ அல்லது மற்றொரு EU+ நாட்டிலோ வசிக்கும் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய தகவல்களையும் (ஏதேனும் இருந்தால்) வழங்குதல்
- பிந்தைய விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான காரணங்களை விளக்குதல்





உங்களிடம் பின்வருவன செய்யுமாறு கேட்கப்படும்.

- உங்கள் விண்ணப்பத்தை ஆதரிக்கும் வகையில் கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும். இதில், நீங்கள் பிந்தைய விண்ணப்பம் செய்ததற்கான அடிப்படையாக உள்ள புதிய கூறுகளும் அடங்கும். புதிய கூறுகள், உங்களுக்கு சர்வதேசப் பாதுகாப்பு தேவை என்பதைச் சுட்டிக்காட்டும் புதிய உண்மைகள் அல்லது சான்றுகளாக இருக்கலாம்.
- சர்வதேசப் பாதுகாப்பிற்கான உங்கள் முந்தைய விண்ணப்பங்கள் பற்றி கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.



நீங்கள் அதிகாரிகளுடன் பகிரும் எந்தத் தகவலும் இரகசியமாகவே வைக்கப்படும். நீங்கள் யாரிடமிருந்து பாதுகாப்பு கோருகிறீர்களோ, அவர்களுடன் இந்தத் தகவல் எப்போதும் பகிரப்படமாட்டாது.

## உங்கள் விண்ணப்பத்தின் பதிவு மற்றும் தாக்கல் எப்போது, எங்கு நடைபெறும்?

உங்களின் சர்வதேச பாதுகாப்புக்கான விண்ணப்பம், உங்களுக்கு அறிவிக்கப்படும் தேதி மற்றும் நேரத்தில், வரவேற்பு மையத்தில் அல்லது குடியேற்றம் மற்றும் அகதிகளுக்கான கூட்டாட்சி அலுவலகத்தில் பதிவு செய்யப்படும். விண்ணப்பம் முன்வைக்கப்பட்டதிலிருந்து அல்லது சரிபார்ப்பு முடிவடைந்ததிலிருந்து அதிகபட்சம் 5 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும்.

உங்கள் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதும், பதிவு செய்யும் போது உங்களுக்கு அறிவிக்கப்படும் தேதி மற்றும் நேரத்தில், அதை நீங்கள் நேரில் தாக்கல் செய்ய வேண்டும். உங்கள் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து அதிகபட்சம் 21 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

விதிவிலக்கான சூழ்நிலைகளில், புகலிட விண்ணப்பத்தை முன்வைத்து தாக்கல் செய்யும் நோக்கம், ஒரு படிவத்தைப் பயன்படுத்தி குடியேற்றம் மற்றும் அகதிகளுக்கான கூட்டாட்சி அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

உங்கள் விண்ணப்பத்தை தாக்கல் செய்வது மிகவும் முக்கியமானது. நீங்கள் உங்கள் விண்ணப்பத்தை தாக்கல் செய்யாவிட்டால், தாக்கல் செய்யாததற்கான காரணம் உங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இல்லாவிட்டால், உங்கள் விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும். இதன் பொருள், விண்ணப்பதாரராகிய உங்கள் நிலை, ஆதரவு மற்றும் சேவைகளுக்கான உங்கள் உரிமை, மேலும் ஜெர்னனியில் தங்கியிருக்கும் உங்கள் உரிமை ஆகியவற்றை நீங்கள் இழக்கலாம்.





[பதிவு செய்யப்பட்ட பின், உங்கள் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதும் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு உத்தியோகப்பூர்வ ஆவணம் உங்களுக்கு வழங்கப்படும்.].

நீங்கள் அதை எப்போதும் உங்களுடன் வைத்திருக்க வேண்டும்.

## படி 2: **உங்கள் விண்ணப்பத்தின் முன்-பரிசீலனை**



உங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதும், அடுத்த படியாக உங்கள் **விண்ணப்பத்தின் ஆரம்பப் பரிசீலனை நடைபெறும்**.
**ஆரம்பப் பரிசீலனையின் போது, நீங்கள் சமர்ப்பித்த கூறுகள் உண்மையிலேயே புதியவையா என்பதையும், நிராகரிக்கப்பட்ட உங்கள் முந்தைய விண்ணப்பத்தின் முடிவை மாற்றக்கூடியவையா என்பதையும் அதிகாரிகள் மதிப்பீடு செய்வார்கள்.**




ஆரம்பப் பரிசீலனையின் போது, உங்களை ஒரு நேர்காணலுக்கு அழைக்கலாம். நீங்கள் ஒரு நேர்காணலுக்கு அழைக்கப்படாவிட்டால், ஆரம்பப் பரிசீலனை கோப்பில் சமர்ப்பிக்கப்பட்ட கூறுகளின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

ஆரம்பப் பரிசீலனையின் விளைவாக, உங்கள் விண்ணப்பம் பின்வருவனவற்றில் ஒன்றாகக் கருதப்படலாம்:

- **ஏற்கத்தக்கது**, அல்லது
- **ஏற்கத்தக்கதல்லாதது**.

உங்கள் விண்ணப்பம் **ஏற்கத்தக்கதாக** இருந்தால், **அது மேலும் பரிசீலிக்கப்படும்**. இதன் பொருள், நீங்கள் சாதாரண புகலிடம் கோரும் நடைமுறையில் உள்ள அதே படிகளைப் பின்பற்றுவீர்கள்.

உங்கள் விண்ணப்பம் **ஏற்கத்தக்கதல்லாததாக இருந்தால்**, **அது மேலும் பரிசீலிக்கப்படாது**; நடைமுறையும் முடிவடையும். உங்கள் விண்ணப்பம் ஏன் ஏற்கத்தக்கதல்லாததாகக் கருதப்பட்டது என்பதை அதிகாரிகள் உங்களுக்கு அறிவிப்பார்கள். அந்தத் தீர்மானம் உங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும். அந்தத் தீர்மானத்துடன் நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், அதற்கு எதிராக மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீடு செய்ய உங்களுக்கு உதவுவதற்காக, இலவசமாக ஒரு சட்ட ஆலோசகரை (வழக்கறிஞர்) கோரலாம்.




உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் புதிய கூறுகளைச் **சமர்ப்பித்து**, அந்த **புதிய கூறுகள்** உங்களுக்கு **சர்வதேசப் பாதுகாப்பு தேவை என்பதைச் சுட்டிக்காட்டினால்**, உங்கள் விண்ணப்பம் ஏற்கத்தக்கதாகும்.

உங்களுக்கு சர்வதேசப் பாதுகாப்பு தேவை என்பதைச் **சுட்டிக்காட்டும்** புதிய கூறுகளை நீங்கள் சமர்ப்பிக்காவிட்டால், உங்கள் விண்ணப்பம் ஏற்கத்தக்கதல்லாததாகும்.

உங்கள் விண்ணப்பம் ஏற்கத்தக்கதாகக் கண்டறியப்பட்டால், பின்வரும் படிகள் பொருந்தும்.

## படி 3. உங்கள் விண்ணப்பத்தின் உட்பொருள் அடிப்படையிலான பரிசீலனை

உங்கள் விண்ணப்பம் ஏற்கத்தக்கதாக இருந்தால், நீங்கள் ஏன் சர்வதேசப் பாதுகாப்பு கோருகிறீர்கள் என்பதையும், ஏன் உங்கள் சொந்த நாட்டிற்கு திரும்ப விரும்பவில்லை என்பதையும் அதிகாரிகள் பரிசீலிப்பார்கள் (இது உட்பொருள் அடிப்படையிலான பரிசீலனை என்று அழைக்கப்படுகிறது). உங்கள் விண்பப்மம் ஏற்கத்தக்கதாக இருந்தால், அது சாதாரண புகலிடம் கோரும் நடைமுறையில் உள்ள அதே படிகளைப் பின்பற்றும். எனினும், உங்கள் பிந்தைய விண்ணப்பத்தைப் பரிசீலிக்க எடுத்துக்கொள்ளப்படும் காலம் விரைவுபடுத்தப்படலாம்.



உங்கள் கோப்பில் உள்ள கூறுகளின் அடிப்படையில் அதிகாரம் நேரடியாக சாதகமான தீர்மானம் எடுக்க முடியாவிட்டால், நீங்கள் ஒரு தனிப்பட்ட நேர்காணலுக்கு அழைக்கப்படுவீர்கள்.

### மருத்துவப் பரிசோதனை



கடந்தகால துன்புறுத்தலின் அல்லது கடுமையான தீங்கின் அடையாளங்கள் தொடர்பாக, அதிகாரிகள் உங்களை ஒரு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கேட்கலாம். இந்தப் பரிசோதனை இலவசமானது; இதற்காக உங்கள் சம்மதமும் கேட்கப்படும்.
இந்தப் பரிசோதனையின் முடிவுகள் பற்றி உங்களுக்கு அறிவிக்கப்படும்; அவை உங்கள் விண்ணப்பத்தின் மதிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்படும். அதிகாரிகள் எந்தப் பரிசோதனையையும் கோரவில்லை என்றால், நீங்கள் உங்கள் சொந்தச் செலவில் அந்தப் பரிசோதனையை கோரலாம்.

## படி 4. உங்கள் விண்ணப்பம் குறித்த தீர்மானம்



உங்களுக்கு சர்வதேசப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை அதிகாரிகள் எழுத்து மூலமாக உங்களுக்கு அறிவிப்பார்கள்.



### மேல்முறையீடு செய்யும் சாத்தியம்

அந்தத் தீர்மானத்துடன் நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், அதற்கு எதிராக மேல்முறையீடு செய்யலாம்.

# உங்களுடைய உரிமைகள் என்ன?

## தங்குவதற்கும் வரவேற்பு ஆதரவும் சேவைகளும் பெறுவதற்குமான உரிமை

இது உங்கள் முதல் பிந்தைய விண்ணப்பமாக இருந்தால், கொள்கையளவில், உங்கள் விண்ணப்பத்தின் பரிசீலனை முடிவடையும் வரை இந்த நாட்டில் தங்க நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.

**பின்வரும் நிலைகளில், உங்கள் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் காலத்தில் நீங்கள் தங்க அனுமதிக்கப்படாமல் இருக்கலாம்**:

- இது உங்கள் இரண்டாவது அல்லது அதற்கு மேலான பிந்தைய விண்ணப்பமாக இருந்தால்; அல்லது
- இந்த நாட்டிலிருந்து உங்களை உடனடியாக அகற்றுவதை தாமதப்படுத்துவதற்காக மட்டுமே நீங்கள் சர்வதேசப் பாதுகாப்பிற்காக விண்ணப்பித்திருந்தால்.

**மேல்முறையீட்டு நடைமுறையின் போது நீங்கள் தங்க அனுமதிக்கப்படாமல் இருக்கலாம்**. அப்படியானால், அதற்கான காரணங்களையும், மேல்முறையீட்டு நடைமுறையின் போது தங்க அனுமதி கோர முடியுமா, முடிந்தால் எவ்வாறு கோரலாம் என்பதையும் அதிகாரிகள் உங்களுக்கு அறிவிப்பார்கள்.

நீங்கள் தங்கியிருக்கும் காலத்தில், **வரவேற்பு ஆதரவும் சேவைளளும்** உங்களுக்கு வழங்கப்படும்; எனினும், தொடர்புடைய அதிகாரத்தின் தனிப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் **அவை வரையறுக்கப்படலாம்**. நீங்கள் பெறவிருக்கும் வரவேற்பு ஆதரவும் சேவைகளும் பற்றிய மேலும் தகவல்களை தனியான ஒரு கையேட்டில் காணலாம்.





## மொழிபெயர்ப்பு உதவியைப் பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது



நீங்கள் ஜெர்மன் மொழியைப் பேசாவிட்டால், உங்கள் விண்ணப்பத்தின் பதிவு மற்றும் சமர்ப்பித்தலின் போது, மேலும் ஒரு தனிப்பட்ட நேர்காணல் நடைபெற்றால் அதன் போதும், அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் உங்களுக்கு உதவுவார். அந்த மொழிபெயர்ப்பாளர் இலவசமானவர்.


## உங்கள் தனிப்பட்ட நேர்காணலின் போது, நீங்கள் முழுமையாக உங்களை வெளிப்படுத்த இது உதவுமெனில், ஆண் அல்லது பெண் மொழிபெயர்ப்பாளரையும் நேர்காணல் நடத்துபவரையும் நீங்கள் கோரலாம்



உங்கள் காரணங்களைப் பொறுத்தும், வசதி இருந்தாலும்தான், உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

## தகவல் பெறவும் இலவச சட்ட ஆலோசனையை கோரவும் உங்களுக்கு உரிமை உள்ளது

புகலிடம் கோரும் நடைமுறையின் போது, இலவசமாக சட்ட ஆலோசனையை நீங்கள் கோரலாம்.



எனினும், **பின்வரும் நிலைகளில் உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை பெறும் உரிமை இல்லாமல் இருக்கலாம்**:

- திருப்பி அனுப்பும் நடைமுறையை ‘நிறுத்த’ மட்டும் நீங்கள் உங்கள் பிந்தைய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தால், அல்லது
- இது உங்கள் இரண்டாவது (அல்லது அதற்கு மேலான) பிந்தைய விண்ணப்பமாக இருந்தால்.

குடியேற்றம் மற்றும் அகதிகளுக்கான கூட்டாட்சி அலுவலகத்திடமிருந்து தகவல்களையும் சட்ட ஆலோசனையையும் நீங்கள் கோரலாம்.

## [உங்கள் சொந்த செலவில்] ஒரு சட்ட ஆலோசகரை (வழக்கறிஞர்) நீங்கள் அணுகலாம்

சட்ட ஆலோசகர் என்பது, அதிகாரிகளுடன் தொடர்புடைய விடயங்களில் உங்களுக்கு தனிப்பட்ட சட்ட உதவி அல்லது பிரதிநிதித்துவம் வழங்கும் நபர் ஆவார். **உங்கள் சொந்த செலவில்**, புகலிடம் கோரும் நடைமுறையின் எந்த நிலையிலும் ஒரு சட்ட ஆலோசகரை அணுகுதது உங்கள் உரிமையாகும்.



சட்ட ரீதியான தீர்வுக் கோரும் நடைமுறையின் போது, உங்கள் சட்டப் பிரதிநிதித்துவத்தின் செலவுகளை ஏற்கத் தேவையான வளங்கள் உங்களிடம் இல்லாவிட்டால், இலவசமாக ஒரு சட்ட ஆலோசகரை நீங்கள் கோரலாம்.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட சட்ட ஆலோசகரை விரும்பினால், அவருடைய தொடர்பு விபரங்களை இயன்றவரை விரைவாக அதிகாரிகளுடன் பகிருங்கள்.
உங்களுடைய தற்போதைய சட்ட ஆலோசகரின் விபரங்களை அதிகாரிகளுடன் பகிருங்கள்; அப்போதுதான் அவர்கள் உங்கள் விண்ணப்பம் குறித்து அவரைத் தொடர்ந்து அறிவித்துக் கொள்ள முடியும்.

## ஐக்கிய நாடுகள் அகதிகள் முகமை (UNHCR) அல்லது பிற அமைப்புகளுடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம்

புகலிடம் கோரும் நடைமுறையின் எந்த கட்டத்திலும், நீங்கள் UNHCR அல்லது அதன் கூட்டாளர் அமைப்புகளுடன் தொடர்புகொண்டு தொடர்பாடலாம்.




UNHCR புகலிடக் கோரிக்கையாளர் மற்றும் அகதிகளின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கிறது. UNHCR அல்லது அதன் கூட்டாளர் அமைப்புகள், புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தகவலும் உதவியும் வழங்குகின்றன.

UNHCR தொடர்பு விவரங்களையும் புகலிட நடைமுறை தொடர்பான தகவல்களையும் UNHCR இணையப்பக்கமான https://help.unhcr.org/ இல் காணலாம்.

விண்ணப்பதாரர்களுக்கு சட்ட ஆலோசனை அல்லது பிற ஆலோசனைகளை வழங்கும் வேறு எந்த அமைப்பையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

## உங்களுடைய கடமைகள் என்ன?

### இந்த நாட்டின் சட்டங்களைப் பின்பற்றுங்கள்.



### நீங்கள் சர்வதேச பாதுகாப்பிற்காக விண்ணப்பித்த நாட்டிலேயே தங்கியிருங்கள்.




வேறு எந்த EU+ நாட்டிற்கும் செல்ல முயற்சிக்க வேண்டாம். அதிகாரிகளால் அதற்கான அனுமதி வழங்கப்பட்டால் மட்டுமே, நீங்கள் வேறு ஒரு EU+ நாட்டிற்கு பயணம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள்..

### அதிகாரிகள் உங்களைத் தொடர்புகொள்ள முடியும் என்றும் நீங்கள் வழங்கப்பட்ட சந்திப்புகளைப் பின்பற்றுகிறீர்கள் என்றும் உறுதிசெய்யுங்கள்.




அதிகாரிகள் உங்களை கேட்டுக்கொள்ளும் எல்லா சந்திப்புகளிலும் நீங்கள் நேரில் கலந்து கொள்ள வேண்டும். நீங்கள் நேரத்திற்கு அங்கு இருக்க வேண்டும். ஒரு கடுமையான காரணத்தால் ஒரு சந்திப்பில் கலந்து கொள்ள முடியாவிட்டால், உடனடியாக அதிகாரிகளுக்கு அறிவித்து அதற்கான காரணத்தை விளக்க வேண்டும்.



## அதிகாரிகளுடன் முழுமையாக ஒத்துழையுங்கள்.

கோரப்பட்டால், நீங்கள் பின்வருவனைகளை செய்ய வேண்டும்.

- உங்கள் விண்ணப்பத்தை ஆதரிப்பதற்காக, உங்கள் தனிப்பட்ட விபரங்கள், ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை வழங்குங்கள்.




- அடையாள ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும். அவை உங்களிடம் இல்லாவிட்டால், ஏன் இல்லை என்பதை விளக்கவும்.



- உங்கள் விரலடையாளங்களும் புகைப்படமும் எடுக்கப்பட அனுமதிக்கவும்.



- குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் இடத்தில் உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.
- நேர்முகப் பேட்டியில் கலந்து கொண்டு, அதில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்..



- அதிகாரிகள் கோரினால், உங்களைச் சோதனை செய்யவும் உங்கள் பொருட்களைச் சோதனை செய்யவும் நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். தேவையானதும் நியாயமானதுமான சூழ்நிலைகளில் மட்டுமே சோதனை மேற்கொள்ளப்படும். சோதனைக்கான காரணங்களை அதிகாரிகள் உங்களுக்கு விளக்குவார்கள். சோதனை, உங்களுடன் ஒரே பாலினத்தைச் சேர்ந்த ஒருவரால், உங்கள் கண்ணியத்தை மதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும்.

## உண்மையைச் சொல்லுங்கள்.



நீங்கள் சொல்வது, உங்கள் விண்ணப்பத்தின் நம்பகத்தன்மைக்கு மிகவும் முக்கியமானது. அதனால், உங்கள் அடையாளம், குடும்பம், சொந்த நாடு, மற்றும் சர்வதேசப் பாதுகாப்பைக் கோருவதற்கான காரணங்கள் பற்றிய முழுமையானதும் சரியானதுமான தகவல்களை நேர்மையாக வழங்க வேண்டும்.

உங்களுக்கு அனைத்தும் நினைவில் இருக்காமல் போகலாம்; ஆகையால், எல்லாக் கேள்விகளுக்கும் உங்களால் பதிலளிக்க முடியாமல் இருக்கலாம். அப்படியானால், பதில்களை உருவாக்காமல், உங்களுக்கு நினைவில் இல்லை என்பதை விளக்குங்கள்.

## சரியான தொடர்பு விவரங்களை வழங்கி, உங்களைத் தொடர்புகொள்ளக் கூடியவராக இருங்கள்.




சர்வதேச பாதுகாப்பிற்கான உங்கள் விண்ணப்பம் தொடர்பாக அதிகாரிகள் உங்களைத் தொடர்புகொள்ள முடியும் நிலையில் இருக்க வேண்டும்.
உங்கள் முகவரி, மின்னஞ்சல் அல்லது தொலைபேசி எண் மாறினால், உடனடியாக அதிகாரிகளுக்கு அறிவிக்கவும்.

❗ நினைவில் கொள்ளுங்கள், உங்கள் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் காலத்தில் நீங்கள் ஜெர்மனியை விட்டு வெளியேறக்கூடாது.

நீங்கள் ஒரு மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தால், அதிகாரிகளின் அனுமதியின்றி வேறு இடத்திற்குச் செல்லக்கூடாது.

## உங்கள் விண்ணப்பத்தை ஆதரிக்கும் அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும், உங்களுக்கு பொறுப்பான குடியேற்றம் மற்றும் அகதிகளுக்கான கூட்டாட்சி அலுவலகத்தின் கிளை அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கவும்.

நீங்கள் தனிப்பட்ட நேர்காணலுக்கு அழைக்கப்படாமல் இருக்கலாம்; மேலும், நடைமுறை மிகக் குறுகியதாக இருந்து, சில நாட்களோ அல்லது சில மணிநேரங்களோ மட்டுமே எடுக்கலாம். ஆகையால், நீங்கள் ஏன் மீண்டும் விண்ணப்பிக்கிறீர்கள் என்பதற்கான அனைத்து காரணங்களையும் புதிய கூறுகளையும் தாமதமின்றி அதிகாரிகளிடம் தெரிவிப்பது முக்கியம்.


இயன்ற இடங்களில், நீங்கள் மூல ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். போலி ஆவணத்தை நீங்கள் சமர்ப்பிக்கக்கூடாது.




உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது, அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும் இயன்றவரை விரைவாக சமர்ப்பிக்க வேண்டும். ஆவணங்களை உடனடியாகப் பெற முடியாவிட்டால், தீர்மானம் எடுக்கப்படும் வரை அவற்றை இயன்றவரை விரைவாக சமர்ப்பிக்க வேண்டும். உங்கள் கோப்பு எண்ணைக் குறிப்பிட்டு, ஆவணங்களை அஞ்சல் மூலம் அல்லது உங்களுக்கு பொறுப்பான கிளை அலுவலகத்தில் நேரில் அல்லது service@bamf.bund.de என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கலாம்.

## நீங்கள் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றாவிட்டால் அதன் விளைவுகள் என்ன?

### உங்கள் புகலிடம் கோரும் நடைமுறை நிறுத்தப்படும்




உங்கள் விண்ணப்பம் **திரும்பப்பெறப்பட்டதாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ** கருதப்படும். இதன் பொருள், நீங்ளள் சர்வதேசப் பாதுகாப்பிற்கான விண்ணப்பதாரர் என்ற நிலையையும், அதனுடன் தொடர்புடைய அனைத்து உரிமைகளையும் இழக்கக்கூடும்.

பின்வரும் செயல்களைச் செய்ய நீங்கள் மறுத்தால், இது நடைபெறும்:

- கேட்கப்பட்ட போது தகவலை வழங்குதல்
- உங்கள் கைரேகைகள் அல்லது புகைப்படம் எடுக்கப்படுதல்
- உங்கள் முகவரியை வழங்குதல்
- தனிப்பட்ட நேர்காணல் இருந்தால், அதன் போது கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளித்தல்

பின்வரும் நிலைகளிலும் இது நடைபெறும்:

- முக்கியமான காரணமின்றி, நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்காவிட்டால்
- முக்கியமான காரணமின்றி, தனிப்பட்ட நேர்காணலில் பங்கேற்காவிட்டால்
- கேட்கப்பட்டபோது, அதிகாரிகளிடம் அறிவிக்கச் செல்லாவிட்டால்
- நீங்கள் தங்க வேண்டிய இடத்தில் தங்கியிருக்காவிட்டால்
- அதிகாரிகளால் உங்களைத் தொடர்புகொள்ள முடியாவிட்டால்
- நாட்டை விட்டு வெளியேறினால்

மேலும், புகலிடம் கோரும் நடைமுறையின் போது எந்த நேரத்திலும் உங்கள் விண்ணப்பத்தைத் திரும்பப்பெற நீங்கள் தீர்மானிக்கலாம்; உதாரணமாக, உங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்ல நீங்கள் தீர்மானித்திருந்தால். இந்நிலையில், நீங்கள் சர்வதேசப் பாதுகாப்பிற்கான விண்ணப்பதாரர் என்ற உங்கள் நிலையை இழப்பீர்கள்.

## வரவேற்பு ஆதரவின் சில வகைகளும் சில சேவைகளும் குறைக்கப்படவோ அல்லது நிறுத்தப்படவோலாம்



சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், உதவி சேவைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் சில வகையான ஆதரவுகளை அல்லது சில சேவைகளை குறைக்கவோ ரத்து செய்யவோ முடிவு செய்யலாம். உங்கள் நிலையை மதிப்பீடு செய்த பின், அத்தகைய முடிவைப் பற்றி உதவி சேவைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் உங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பார்கள்.

## உங்கள் விண்ணப்பம் பாதகமாகப் பாதிக்கப்படக்கூடும்.

உங்கள் அடையாளம் அல்லது உங்கள் விண்ணப்பத்துடன் தொடர்புடைய தவறாக வழிநடத்தும் அல்லது பொய்யான தகவல்களை நீங்கள் வழங்கினாலோ, அல்லது ஆவணங்களை அழித்தாலோ அல்லது போலியாக உருவாக்கினாலோ, அது உங்கள் விண்ணப்பத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம்; உதாரணமாக, பின்வருமாறு.



- உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்; மேலும், நீங்கள் சர்வதேசப் பாதுகாப்பைப் பெறாமல் போகலாம்.

- உங்கள் விண்ணப்பம் புகலிடம் தொடர்பான எல்லை நடைமுறையில் பரிசீலிக்கப்படலாம் (அவ்வாறு நடந்தால், அந்த நடைமுறை பற்றிய குறிப்பிட்ட தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படும்).

புகலிடம் கோரும் நடைமுறையின் போது நீங்கள் உண்மையைச் சொல்லவில்லை என்று அதிகாரிகள் பின்னர் கண்டறிந்தால், உங்களுக்கு வழங்கப்பட்ட சர்வதேசப் பாதுகாப்பும் திரும்பப் பெறப்படலாம்.

## உங்களுக்கு அது தேவைப்பட்டால், நீங்கள் சிறப்பு ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களுக்கு ஏதேனும் சிறப்பு ஆதரவு தேவைப்பட்டால், அதைப் பற்றித் தாமதமின்றி அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். இத்தகைய தேவைகள் கர்ப்பம், நோய், அல்லது உளவியல், உடல், அல்லது பாலிலல் வன்முறை அனுபவங்கள் போன்ற பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து உருவாகலாம்.
அதிகாரிகள் உங்கள் நிலையை மதிப்பீடு செய்து, புகலிட நடைமுறையில் நீங்கள் பங்கேற்பதை எளிதாக்குவதற்காக கூடுலல் ஆதரவை வழங்கக்கூடும். உதாரணமாக, அவர்கள் உங்கள் வழக்கிற்காக சிறப்பு பயிற்சி பெற்ற பணியாளர்களை நியமிக்கலாம் அல்லது புகலிட நடைமுறையின் காலநீளத்தைச் சரிசெய்யலாம்.



## நீங்கள் உங்கள் நாட்டிற்கு திரும்ப விரும்பினால் என்ன செய்யலாம்?

புகலிட நடைமுறையின் எந்த நிலையிலும், நீங்கள் தன்னார்வமாக பின்வருவிடங்களுக்கு திரும்பத் தீர்மானிக்கலாம்:

- உங்கள் நாடு அல்லது
- நீங்கள் அவ்வாறு செய்ய உரிமை கொண்டிருந்தால், இடைநிலை நாடு அல்லது மற்றொரு மூன்றாம் நாடு.

நீங்கள் தன்னார்வமாகத் திரும்பிச் செல்லத் தீர்மானித்தால், உங்கள் புகலிட நடைமுறை நிறுத்தப்படும் அல்லது நிராகரிக்கப்படும்; மேலும் ஜெர்மனியில் தங்கியிருக்க உங்களுக்கு இனி உரிமை இருக்காது.

நீங்கள் தன்னார்வமாகத் திரும்பிச் செல்ல விரும்பினால், கீழ்க்கண்ட அதிகாரியைத் தொடர்புகொள்ளவும்:

குடியேற்றம் மற்றும் அகதிகளுக்கான கூட்டாட்சி அலுவலகம் – திரும்பிச் செல்லலுக்கான உதவி அழைப்புக்கோடு

Frankenstraße 210

90461 Nürnberg

தொலைபேசி: +49 911 943 – 0

தொலைநகல்: +49 911 943 - 1000

பாதுகாப்பான மற்றும் சட்டபூர்வமான திரும்பிச் செல்லலுக்கான ஆலோசனையும் உதவியும் உங்களுக்கு வழங்கப்படலாம்.



## தகவலைப் பெற்றதற்கான உறுதிப்படுத்தல்

இந்தத் தகவலை நீங்கள் பெற்றுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்துமாறு ஒரு அதிகாரி உங்களிடம் கேட்பார். இதில் ஏதேனும் உங்களுக்கு புரியவில்லை என்றாலோ அல்லது உங்களிடம் மேலதிகக் கேள்விகள் இருந்தாலோ, நீங்கள் எப்போதும் கேட்கலாம்.

# எனது குறிப்புகள்

# எனது குறிப்புகள்

EUROPEAN UNION AGENCY FOR ASYLUM

குடியேற்றம் மற்றும் அகதிகளுக்கான கூட்டாட்சி அலுவலகம்

இந்த விளக்கப் பிரசுரம் தகவல் நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டது. இது தனிப்பட்ட வகையில் எந்த உரிமைகளையோ கடமைகளையோ உருவாக்குவதில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் புகலிட முகமை (EUAA) இந்தப் பொருளின் முக்கிய உள்ளடக்கத்தை வழங்கியுள்ளது. இந்த விளக்கப் பிரசுரத்தை நகலெடுப்பதற்கும் மாற்றம் செய்வதற்கும் EU உறுப்புநாடுகளுக்கு டட்டும் EUAA அனுமதி வழங்கியுள்ளது. இந்த விளக்கப் பிரசுரத்தில் EU உறுப்புநாடுகளாலோ பிற பொறுப்புடைய மூன்றாம் தரப்பினராலோ இடம்பெற்றுள்ள தகவல்களின் துல்லியத்திற்கோ உள்ளடக்கத்திற்கோ முழுமைக்கோ சட்டபூர்வத்திற்கோ நம்பகத்தன்மைக்கோ EUAA எந்தப் பொறுப்பையும் சட்டப் பொறுப்பையும் ஏற்காது. இந்த விளக்கப் பிரசுரத்தில் இடம்பெற்றுள்ள தகவல்கள் பயன்படுத்தப்படும் விதத்திற்காக EUAAவும் அதன் சார்பில் செயல்படும் எவரும் பொறுப்பேற்கமாட்டார்கள்.

© ஐரோப்பிய ஒன்றிய அசைலத்திற்கான முகமை, 2025